# தொல்காப்பியர் பேரவைத் தொடக்கவிழா




நிலம்: தவத்திரு சாந்தலிங்க அடிகளார் தமிழ்க்கல்லூரி வளாகம், பேரூர், கோவை-**641101.**

பொழுது: தி.பி. **2048,** பொற்றடை, ஆவணி **20,** செவ்வாய் **(05-09-2017)**













# 'தொல்காப்பியம் பயின்றால் சமூகம் பக்குவமடையும்'

பேரூர், செப். 7–

"பள்ளி கல்வி முறையில் மாற்றம் கொண்டுவரும் வேளையில், தொல்காப்பியம் குறித்த சிந்தனைகளை பாடத்திட்டத்தில் இடம்பெற செய்வது அவசியம்," என, பேரூராதீனம் சாந்தலிங்க ராமசாமி அடிகள் பேசினார்.

பேரூர் தமிழ் கல்லூரியில் தொல்காப்பியர் பேரவையின் துவக்க விழா, நேற்று முன்தினம் நடந்தது.

இதில், சிறப்பு விருந்தினராக பேரூராதீனம் சாந்தலிங்க ராமசாமி அடிகள் கலந்து கொண்டு, தொல்காப்பியர் பேரவையை துவக்கி வைத்து பேசியதாவது:

தொல்காப்பியம் தமிழில் கிடைக்கும் முதல் இலக்கண நூல் மட்டுமல்ல வாழ்வியல் நெறிகளைக் கற்றுத் தரும் கோட்பாட்டு நூல். தமிழர்கள் அனைவரும் தொல்காப்பியத்தை கற்க வேண்டும்.

பள்ளி கல்வி முறையில் மாற்றம் கொண்டுவரும் இவ்வேளையில், தொல்காப்பியம் குறித்த சிந்தனைகளை பாடத்திட்டத்தில் இடம்பெறச்செய்வது அவசியம்.

தொல்காப்பியத்தின் பொருளதிகாரத்தில் வாழ்வியல் மற்றும் தத்துவநிலைகளை அறிந்து கொள்ளும் பொருட்டு, உயர் கல்வியிலும் இடம் பெறச்செய்ய வேண்டும். 'சிறந்தது பயிற்றல்' என்பது தொல்காப்பியத்தின் விதி. அவ்வகையில் வாழ்க்கைக்கு தேவையான சிறந்த தன்மைகள் தொல்காப்பியத்தில் இடம் பெற்றுள்ளன. இக்கால குழந்தைகளுக்கு தொல்காப்பியத்தை பாடல்களாக எடுத்துக்கூறினால் அவர்களின் மனங்கள் எளிதாக பக்குவப்படும்.

இவ்வாறு அவர் பேசினார்.

நிகழ்ச்சியில், சிரவை ஆதீனம் குமரகுருபர சுவாமிகள், மருதாசல அடிகள் வாழ்த்துரை வழங்கினர். தொல்காப்பியர் பேரவை தலைவர் காளியப்பன், தலைமையுரை வழங்கினார்.

பேரவை செயலர் வேலவன், பேராசிரியர்கள் மற்றும் கல்லூரி மாணவர்கள் கலந்து கொண்டனர். தொல்காப்பியர் பேரவை, மாதந்தோறும், ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் கல்லூரி வளாகத்தில் நடைபெறுமென்று அறிவிக்கப்பட்டது.